IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.
OS No.234/2023

| | | |
|---|---|---|
| Name | : Kanchana | P.W.1 |
| Father/Husband Name | : Umapathy | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : 03.-03-2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2025.

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

1. எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 30 வருடங்கள் ஆகிறது தேதி சரியாக ஞாபகம் இல்லை. நான் திருமணமான நாளில் இருந்து பிரமாண வாக்குமூலத்தில் உள்ள முகவரில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை நான் இதுவரை பார்த்தது இல்லை என்றால் பார்த்துள்ளேன் நான் விவசாயம் எதுவும் வழக்கு சொத்தில் செய்யவில்லை என்றால் என் தந்தை தான் பார்த்து வந்தார். தந்தை தற்போது உயிருடன் இல்லை. என் தந்தை இறந்தபிறகு யார் இந்த சொத்தை பார்த்து கொள்கிறார் என்றால் நான் தான் பார்த்து கொள்கிறேன். சென்னையில் வசிக்கும் நான் எப்படி காரணை கிராமத்தில் உள்ள வழக்கு சொத்தில் விவசாயம் செய்கிறேன் என்றால் அவ்வபோது ஊருக்கு வருவேன். வழக்கு சொத்தில் நான் அடமானம் வைத்திருந்தேனா என்றால் ஆமாம். நான் என் தம்பியிடம் தான் அடமானம் வைத்து இருந்தேன். எதற்காக என் தம்பியிடம் நான் அடமானம் வைத்ததேன் என்றால் எனக்கு பணம் தேவைப்பட்டால் அடமானம் வைத்தேன். அடமானம் பத்திரத்தில் ரூ. 50 ஆயிரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனது தம்பி அடமானம் எழுதி கொடுத்தால் தான் பணம் தருவேன் என்று சொல்லியதால் அடமானம் எழுதி கொடுத்தேன். என் தந்தை எப்போது எனக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் 2013 வருடம்.

2. அடமானம் செய்தது எந்த வருடம் என்றால் எனக்கு எழுதி கொடுத்த பிறகு 6 மாதம் கழித்து அடமானம் வைத்தேன் தேதி சரியாக ஞாபகம் இல்லை. வ.சா.ஆ. 11 ஆவணத்தின் படி 02/07/2015 அன்று தான் அடமானம் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வ.சாஆ. 11 ஆவணத்தை எனது வழக்கறிஞர் தான் தயார் செய்தார் என்றால் ஆமாம். 03/01/2015 அன்று எனது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு

அனுப்பினேன் என்றால் சரிதான். நான் வைத்த அடமானத்தை 25/11/2015 அன்று ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். நானும் என் தந்தையோ அல்லது எனது மூதாதையரோ வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் அனுபத்தில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக ஆவணங்களை தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் ஆண்டி என்ற தம்பிரான் என்பவரிடம் இருந்து வழக்கு சொத்தை நடேசன் செட்டியார் என்பவர் ஆவணம் எண். 14/1950 என குறிப்பிட்டத்தில் ஆண்டி என்ற தம்பிரான் என்ற பெயரை எடுத்து சொல்லி உள்ளேன் என்றால் என் தந்தைக்கு தான் அந்த விவரங்கள் தெரியும். வ,சா.ஆ. 1 ஆவணத்தில் சின்னப்பையன் மகன் தம்பிரான் என்று தான் உள்ளது என்றும் பிராமான வாக்குமூலத்திலம் வாதுரையிலும் ஆண்டி என்ற தம்பிரான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது தந்தைக்கு தான் அந்த விவரம் தெரியும். நான் இந்த வழக்கை தாக்கல் செய்தபோது எனது தந்தை உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை. வ.சா.ஆ. 1 ஆவணத்தில் சொத்து விவரத்தில் பட்டா எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆண்டி என்ற தம்பிரான் பெயரில் உள்ள பட்டாவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா எற்னல் இல்லை. வ.சா.ஆ.2, வ.சா.ஆ. 6 ஆவணத்திலும் ஆண்டி என்ற பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. வழக்கு தாக்கல் செய்தபோது எனது தந்தை உயிருடன் இல்லை என்றும் அப்படி இருக்கையில் எப்படி ஆண்டி என்ற தம்பிரான் பெயரை குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. நடேசன் செட்டியார் பெயரில் பட்டா உள்ளதா என்றால் எனது அப்பா பெயரில் தான் உள்ளது. நடேசன் செட்டியார் வாரிசுதார்களிடம் இருந்து என் தந்தை வாங்கியதாக சொல்லப்பட்டதில் அவருடடைய வாரிசுதாரர்கள் ராஜம்மாள் மற்றும் சின்னம்மாள் பெயரில் ஆவது பட்டா உள்ளதா என்றால் இல்லை. என் தந்தை ராஜம்மாள் மற்றும் சின்னமா்ளிடம் இருந்து 1984 ல் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பிட்டுள்ளேன். எனது தந்தையின் தந்தை துளுக்கானம் என்பவரை நான் பார்த்துள்ளேன் நான் சிறுவயதாக இருக்கும்போது இறந்து விட்டார். என் தாத்தாவின் தம்பி பாலகிருஷ்ணன் என்பவரை நான் பார்த்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது.. பிரதிவாதிகளின் பாட்டியும் பாலகிருஷ்ணனின் மனைவியுமான கங்கம்மாளை நான் பார்த்துள்ளேனா என்றால் அவரை தெரியாது. பிரதிவாதிகளின் தந்தை செல்லப்பன்

என்பரை எனக்கு தெரியாது. செல்லப்பன் நாயக்கர் என்பவர் கங்கம்மாள் என்பவரிடம் இருந்து வழக்கு சொத்தை வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

**பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டு கொண்டுதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d – N.Anupriya, 03.03.2025.

Taken down by me in open court read over in
the witness and admitted by the witness to be correct

DM cum JM/TPR.